# பத்திரிக்கை செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் ரூ.3,000/- கேட்டு பெற்ற கிராம நிர்வாக அதிகாரி கைது

புகார்தாரர் திரு.முருகேசன், புதுக்கோட்டை, சேந்தமங்கலம் தாலுகா, நாமக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் பட்டா மாற்றம் செய்ய சேந்தமங்கலம் கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பத்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.குமரவேலு, கிராம நிர்வாக அதிகாரி, சேந்தமங்கலம், தாலுகா, நாமக்கல் மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.3,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை நாமக்கல் பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 04.03.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.குமரவேலு, கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் லஞ்ச பணமான ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

## PRESS NOTE

**VILLAGE ADMINISTRATIVE OFFICER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.3,000/- FOR PATTA NAME TRANSFER**

The complainant Tr.Murugesan, is residing at Pudukottai, Senthamangalam Taluk, Namakkal District. The complainant applied patta name transfer at Village Administrative Office, Senthamangalam Taluk, Namakkal District, for which Tr.Kumaravelu, Village Administrative Officer, Senthamangalam Taluk, Namakkal District demanded Rs.3,000/- as bribe for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Namakkal Detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 04.03.2023, during the trap Tr. Kumaravelu, Village Administrative Officer, reiterated his demand and received the bribe amount of Rs.3,000/- from the complainant. The accused was arrested.